23

# [ரோமர் 5:12-17ஐப் பற்றிய] ஒரு படிப்பு: இரண்டு "ஆதாம்கள்"[1]

ரோமர் 5:12-21ல், பவுல் ஆதாமையும் கிறிஸ்துவையும் ஒப்பிட்டு நேரெதிராக ஒப்பிட்டார். முன்னதாக, அவர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் இதேபோன்ற ஒரு ஒப்பீட்டை/நேரெதிர் ஒப்பீட்டை ஏற்படுத்தியிருந்தார்:

> மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:21, 22).

> அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது, பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் (1 கொரிந்தியர் 15:45).

> முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர் (1 கொரிந்தியர் 15:47).

> மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம் (1 கொரிந்தியர் 15:49).

முதல் ஆதாம், மரிப்பதற்கென்றே அழிவை நோக்கிச்சென்ற பூமிக்குரிய குடும்பத்தின் தலைவனாக இருக்கையில், "கடைசி ஆதாம்" (கிறிஸ்து) ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்ட குடும்பத்தின் (சபையின்) தலைவராக இருக்கிறார் என்று பவுல் சித்தரித்தார்.

இந்தப்பாடத்தில், நாம் ரோமர் 5ல் ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையிலான பவுலின் ஒப்பீடு/நேரெதிரான ஒப்பீடு பற்றிய விவரமான படிப்பைத் தொடங்குகிறோம். முதல் ஆதாம் மற்றும் "கடைசி ஆதாம்" என்ற 1 கொரிந்தியர் 15ல் உள்ள பவுலின் சொற்றொடராக்கத்தை நாம் கடன்பெறுவோம். முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டதுபோல், முரண்பாடான இவ்வசனப்பகுதியின் வசனங்களில் பவுலின் கருத்துக்களைப் புரிந்துகொள்ளுதல் என்பது எப்போதுமே சுலபமானதாக இருப்பதில்லை. இவ்வசனப்பகுதிக்குச் சாத்தியமான விளக்கங்களை நான் ஆலோசனையாக எடுத்துரைப்பேன். நீங்கள்

*இவ்வசனப்பகுதியை ஜெபத்துடன் படித்து உங்கள் சொந்த முடிவுகளைப் பெற்றடைய வேண்டும்.*

## இரண்டு “ஆதாம்கள்” அறிமுகப்படுத்தப்படுகின்றனர் (5:12-14)

*இவ்வசனப்பகுதியின் நேரெதிர்க்கருத்து, முதல் வார்த்தையுடன் தொடங்குகிறது: ‘‘இப்படியாக’’ (வசனம் 12அ). ‘‘இப்படியாக’’ என்பது இப்பகுதியை இதற்குமுன் நடந்துள்ளவற்றுடன் இணைக்கிறது - ஆனால் அந்த இணைப்பு என்னவாக உள்ளது? சிலர் இவ்வசனப்பகுதியை முந்திய வசனத்துடன் (வசனம் 11) அல்லது முந்திய பாகத்துடன் (வசனங்கள் 1-11) பிணைக்கின்றனர். மற்றவர்கள், நமது வசனப்பகுதியானது ஏதோ ஒருவகையில் முந்திய நான்கு அதிகாரங்களைத் தொகுத்துரைக்கிறது என்று நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக, “ஆக்கினைத்தீர்ப்பு” (1:18-3:20) மற்றும் “நீதிமானாக்கப்படுதல்” (3:21-5:21) ஆகியவை இந்த நிருபத்தின் முதல் இரண்டு தலைப்புகளாக உள்ளன என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். பின்பு, அவர்கள் 5:12-21 வசனப்பகுதியானது இவ்விரண்டின் ஆதாரமூலத்தை விவரிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். 16ம் வசனத்தில், நாம் “அந்தத் தீர்ப்பு ஆதாமின் ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபை வரமோ அநேக குற்றங்களை நீக்கி, [இயேசுவால்] நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது” என்று வாசிக்கிறோம்.*

*12 முதல் 21 வரையுள்ள வசனப்பகுதியானது அதற்கு முன் கூறப்பட்டவற்றுடன் எவ்வாறு பொருந்துகிறது என்பதைப்பற்றி எனக்கு மிகவும் பிரியமான விளக்கமானது, நீண்டகாலத்திற்கு முன்பு தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் ஒருவரான கிறிசோஸ்தோம் (கி.பி. 347-407) என்பவரால் எழுதப்பட்டது. பவுல் மீண்டுமாக, ஒரு யூதத்துவ மறுப்பை எதிர்நோக்கியிருந்தார் - இம்முறை, அது யூதராயினும் புறஜாதியாராயினும் இயேசு அளிக்கும் இரட்சிப்பு எல்லாருக்கும் கிடைக்கும்படியானது என்ற அவரது போதனைக்கு இந்த எதிர்ப்பு ஏற்படலாம் என்று அவர் நினைத்தார் என்று கிறிசோஸ்தோம் கருத்துத் தெரிவித்தார் (3:22ஐக் காணவும்). செயல்விளைவில் கிறிசோஸ்தோம், “யூதர் உங்களிடத்தில், ‘கிறிஸ்து என்ற ஒருவரால் செய்யப்பட்ட நன்மை உலகத்தை எவ்வாறு இரட்சிக்கும்?’ என்று கேட்கும்போது, நீங்கள் அவரிடத்தில், ‘ஆதாம் என்ற ஒரு நபரால் உலகம் எவ்வாறு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டது?’ என்று கேட்கலாம்” என்று எழுதினார்.[2] யூதர்கள், ஒரே மனுஷனின் (ஆதாமின்) ஒரு செயலினால் இந்த உலகிற்கு துன்பம் கொண்டுவரப்பட்டது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டனர்; அதைச் சுட்டிக்காண்பித்த பவுல், அதுபோன்றே ஒரே மனுஷனின் (இயேசுவின்) ஒரு செயலினால் வெற்றி கொண்டுவரப்பட்டது என்று குறிப்பிட்டார்.*

### முதலாம் ஆதாம் அறிமுகப்படுத்தப்படுதல்

*பவுலின் உரையாடல் அவரது முந்திய குறிப்புரைகளுடன் கொண்டுள்ள தொடர்பு என்னவாக இருந்தாலும், அவர் தமது உரையாடலைப் பின்வரும் கூற்றுடன் தொடங்கினார்: “இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் ...*

*உலகத்திலே பிரவேசித்துபோலவும்" (வசனம் 12அ). "ஒரே மனுஷன்" என்பது ஆதாம் என்பவராக இருந்தார் (வசனம் 14ஐக் காணவும்).[3] விலக்கப்பட்ட மரத்தின் கனியை முதலில் ஏவாள் உண்டிருந்தாள் என்பதையும் இரண்டாவதாகவே ஆதாம் அவ்வாறு செய்தார் என்பதையும் பவுல் அறிந்திருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை (ஆதியாகமம் 3:6). இருப்பினும், ஆதாம் தமது குடும்பத்தின் தலைவன் என்ற வகையில் (எபேசியர் 5:23அவைக் காணவும்), அந்தப்பாவத் திற்குக் கணக்கொப்புவிக்க வேண்டியவராயிருந்தார். உண்ணக்கூடாது என்ற கட்டளை முதலில் அவருக்குத்தான் தரப்பட்டிருந்தது (ஆதியாகமம் 2:15-17). மேலும், ஏவாளைப்போல், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை; அவர் விளைவுகளின் தெளிவான புரிந்துகொள்ளுதலோடு செயல்பட்டார் (1 தீமோத்தேயு 2:14).*

*"பாவம் உலகத்தில் பிரவேசித்தது" என்பது ஆதாமின் கீழ்ப்படியாமை யினுடைய ஒரு விளைவாக இருந்தது. ஆதாமின் பாவத்திற்கு முன்னதாகவே பாவம் நிலவியிருந்தது - பாவம் செய்த தூதர்களைப் பற்றிப் பேதுரு எழுதினார் (2 பேதுரு 2:4) - ஆனால் ஆதாமின் மீறுதலானது, "பூமி" என்று நாம் அழைக்கும், புதிதாய்ப்படைக்கப்பட்ட உலகத்தில் பாவத்தை அறிமுகப்படுத்திற்று.*

*''பாவத்தினுடைய மரணம் உலகத்திலே பிரவேசித்தது'' என்பது இரண்டாவது விளைவாக இருந்தது (வசனம் 12ஆ). "மரணம்" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை thanatos என்பதாகும். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இவ்வார்த்தையின் வடிவங்களைப் பவுல் சுமார் முப்பது முறைகள் பயன்படுத்தினார். Thanatos என்ற வார்த்தையினுள் ''பிரிதல்'' என்ற கருத்து இயல்பாய் அமைந்துள்ளது. உடல்ரீதியான மரணம் என்பது "உடலில் இருந்து ஆத்துமா பிரிதல்" ஆகும் (யாக்கோபு 2:26அவைக் காணவும்). ஆவிக்குரிய மரணம் என்பது "தேவனிடத்தில் இருந்து மனிதன் பிரிதல்" ஆகும்[4] (ஏசாயா 59:1, 2; எபேசியர் 2:1; 1 தீமோத்தேயு 5:6ஐக் காணவும்). துன்மார்க்கர் "கர்த்தருடைய பிரசன்னத்தில் இருந்து" நித்தியத்திற்கும் பிரிக்கப்படும்போது (2 தெசலோனிக்கேயர் 1:9), அது ''இரண்டாம் மரணமாக'' இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:6, 14). (பவுல் ரோமருக்குத் தமது நிருபத்தை எழுதியதில், "மரணம்" என்ற வார்த்தையின் வடிவங்களை அதன் தொடர்புக் கருத்துக்களிலும் பயன்படுத்தினார். உதாரணமாக, அவர் பாவத்திற்கு மரித்தல் [6:2] மற்றும் பிரமாணத்திற்கு மரித்தல் [7:4-6] பற்றிப் பேசினார்.)*

*முந்திய பாடத்தில் கலந்துரையாடப்பட்டதுபோல, 12ம் வசனத்தில் உள்ள "மரணம்" என்ற வார்த்தையை, நாம் ஆதாமின் பாவம் மனிதகுலத் திற்கு - உடல்ரீதியான மரணத்தில் தொடங்கி - கொண்டுவந்த எல்லாத் துன்பங்களையும் அது குறிப்பிடுகிறது என்ற வகையில் எடுத்துக்கொள்வோம். தேவன் ஆதாமிடத்தில், அவன் நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் கனியை உண்டால், அவன் மரித்துவிடுவான் என்று கூறினார் (ஆதியாகமம் 2:17; 3:19ஐக் காணவும்) - மற்றும் அவன் மரித்தான் (5:5). உடல்ரீதியான மரணம் என்ற இந்த சாபம் ஆதாமுடன் மட்டுப்படவில்லை. நமது வேதவசனப்பகுதி தொடர்ந்து, "மரணம் எல்லாருக்கும் வந்தது ..." என்று கூறுகிறது (வசனம் 12இ).* LB *வேதாகமத்தின் பொழிப்புரையில்,* ''so everything began to grow old and die'' *("எனவே எல்லா உயிர்களும் முதிர்வயதை அடையவும் மரணம் அடையவும் தொடங்கின") என்றுள்ளது. ஒருமுறை ஒரு அறுவைச்சிகிச்சை நிபுணர், நவீன மருத்துவம் ஏற்படுத்தியுள்ள மாபெரும் வளர்ச்சியைப் பற்றி விரிவுரையாற்றினார்.*

அத்துடன் கூடுதலாக அவர், "ஆனால் திகைப்புக்குரிய இந்த வளர்ச்சி இருந்தும் கூட, இறப்புவிகிதம் 100% ஆக நிலைத்திருக்கிறது" என்று கூறினார்.[5]


மேலும், ஆதாமினால் வருவிக்கப்பட்ட மரணம் உடல்ரீதியான மரணத்துடன் மாத்திரம் மட்டுப்படவில்லை. அவனது பாவம் அவனைத் தேவனிடத்தில் இருந்து பிரித்தது (ஏசாயா 59:1, 2); இவ்வாறு அவன் ஆவிக்குரிய வகையிலும் மரித்தான். பவுல் தமது சிந்தனைகளில் ஆவிக்குரிய மரணத்தையும் உள்ளடக்கினார் என்பது தெளிவு: "எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது" (வசனம் 12இ). "எல்லாமனுஷரும் பாவம்செய்த" என்பது 3:23ல் "எல்லாரும் பாவஞ்செய்து" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே கிரேக்க வார்த்தைகளாகவே உள்ளன (*pantes hemarton*). பவுல் இவ்வார்த்தைகளை அதே கருத்துடன் இவ்விடத்தில் பயன்படுத்தியுள்ளார் என்ற யூகத்தில், 12ம் வசனமானது இந்த வரிகளுடன் சிலவற்றைப் போதிக்கிறது: "ஆதாம் பாவம் செய்தபோது, உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் இவ்வுலகத்திற்குள் வந்தது.[6] உடல்ரீதியான மரணம் எல்லா மக்களுக்கும் பரவியது போலவே, ஆவிக்குரிய மரணமும் எல்லா மக்களுக்கும் பரவியது, ஏனென்றால் எல்லாரும்[7] ஆதாம் என்ற தகப்பனின் உதாரணத்தைப் பின்பற்றிப் பாவம் செய்தோம்."

12ம் வசனத்தில் தொடங்கிய வாக்கியத்தைப் பவுல் முடிக்கவில்லை. இது NASB வேதாகமத்தில், "sinned" என்ற வார்த்தைக்குப் பின்னால் ஒரு கோட்டுக்குறியை (-) கொண்டு சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. மற்ற மொழி பெயர்ப்புகள் இதை வெவ்வேறு வழிகளில் சுட்டிக்காண்பிக்கின்றன. ASV வேதாகமத்தில் 12ம் வசனத்திற்குப் பின்பு ஒரு அரைப்புள்ளி (:) உள்ளது, அதேவேளையில் KJV வேதாகமத்தில் 12ம் வசனத்திற்குப்பின்பு, 13 முதல் 17 வரை உள்ள வசனங்கள் அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ளன. 12ம் வசனத்தின் சிந்தனையானது 18ம் வசனத்தில் மீண்டும் தொடரப்படும்.

13ம் வசனம், "நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது" என்று தொடங்குகிறது. கிரேக்க மொழியில் நியாயப்பிரமாணம் என்ற வார்த்தைக்கு முன்னதாக திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் இருப்பதில்லை, ஆனால் பவுல் மோசேயின் நியாயப்பிரமாணத்தையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது தெளிவு (வசனம் 14ஐக் காணவும்). முந்திய பாடங்களில் குறிப்பிடப்பட்டதுபோல, மக்கள் எப்போதுமே நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்தனர், ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் வரும்வரைக்கும் அவர்கள் *எழுதப்பட்ட* பிரமாணத்தைக் கொண்டிருந்ததில்லை. மக்கள் தாங்கள் கொண்டிருந்த எழுதப்படாத பிரமாணங்களை முறித்துப்போட்டதால், மே ஈசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும்கூட "பாவம் உலகத்திலிருந்தது."

தொடர்ந்து 13ம் வசனம், "நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது" என்று கூறுகிறது. "எண்ணப்படுதல்" என்ற வார்த்தையானது, 4ம் அதிகாரத்தில் "எண்ணப்பட்டது" என்று மொழி பெயர்க்கப்பட்ட அதே வேர்வார்த்தையிலிருந்து வந்துள்ளது. இவ்வாறு HCSB வேதாகமத்தில், "sin is not charged to one's account when there is no law" ("நியாயப்பிரமாணம் இல்லாதபோது பாவம் ஒருவரின் கணக்கில் ஏற்றபடாது") என்றுள்ளது. மேம்போக்காகப் பார்க்கையில், இவ்வசனமானது,

மக்கள் எழுதப்பட்ட பிரமாணம் இருப்பதற்கு முன்னர் பாவம் செய்தனர், ஆனால் மோசேயினுடைய நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் பாவிகள் என்று *எண்ணப்படவில்லை* என்று கூறுவதுபோல் காணப்படுகிறது. இருப்பினும், பவுல் எழுதப்பட்ட பிரமாணத்தைக் கொண்டிருப்பதற்கு முன்னரேகூட மக்கள் பாவம் செய்தனர் - மற்றும் அவர்கள் தங்கள் பாவங்களுக்குக் *கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாயிருந்தனர்* - என்ற கருத்தைக் கவனமாக நிலைநாட்டினார் (3:9ஆவைக் காணவும்). மீண்டும் ஒருமுறை, பவுலின் சிந்தனை விரித்துரைக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. அதைச் செய்வதற்கான ஒரு வழி பின்வருமாறு: "நியாயப்பிர மாணம் இல்லாதபோது பாவம் எண்ணப்படவில்லை [ஆனால் ஒவ்வொருவரும் ஒரு பிரமாணத்தை - எழுதப்படாத பிரமாணத்தைக் - *கொண்டிருந்தனர்*]."[8]




படைப்பு மற்றும் நியாயப்பிர மாணம் கொடுக்கப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் பல நூற்றாண்டுகளாக மனிதகுலம் எழுதப்பட்ட நியாயப்பிரமா ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மைநிலையிலும், அவர்கள் யாவரும் மரித்தனர்: "அப்படியிருந்தும், மரண மானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ... ஆண்டுகொண்டது" (வசனம் 14அ). மரணம் என்பது தனது குடிமக்களை மரிக்கும்படி கட்டளையிடும் கொடுங்கோல் அரசனாக நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்படுத்தப்பட்ட கூற்றானது உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய மரணம் என்ற இருவிஷயங்களுக்கும் உண்மையாக உள்ளது. நாம் அறிந்துள்ள வரையில், ஆதாமுக்கும் மோசேக்கும் இடையில் ஒரே ஒரு நபர் மாத்திரமே உடல்ரீதி யான மரணம் அடையாதிருந்தார்: ஏனோக்கு (ஆதியாகமம் 5:24). ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு எதுவும் இல்லை. பொறுப்புள்ள எல்லா மக்களும் தங்கள் சொந்தப் பாவத்தினால் ஆவிக்குரிய வகையில் மரித்தனர். மரணத்தின் ஆளுகை உலகளாவியதாக மனிதகுலம் முழுவதையும் பாதிப்பதாக இருந்தது.

மரணத்தின் ஆளுகையானது, "ஆதாமின்[9] மீறுதலுக்[10] கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது" என்னுமளவுக்கு விரிவானது (வசனம் 14ஆ). மக்கள் பாவஞ்செய்திருந்தனர், ஆனால் "அவர்கள் ஆதாம் செய்ததுபோல ஒரு திட்டமான தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியா திருக்கவில்லை" (NLT). ஆதாமுக்குப்போலவே அவர்களுக்கு, "[நீ சரியானதைச் செய்யத்தவறினால்] சாகவே சாவாய்" என்று கூறப்படவில்லை (ஆதியாகமம் 2:17).[11] இருந்தபோதிலும், அவர்கள் - உடல்ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - *மரித்தனர்.*

### *“பிந்தின ஆதாம்” அறிமுகப்படுத்தப்படுதல்*

*இந்த இடம் வரையில், வசனப்பகுதியானது ஒரு மங்கலான சித்திரத்தையே வரைந்துள்ளது. முதல் ஆதாமின் பாவம் மனிதகுலத்திற்குப் பேரழிவைக் கொண்டுவந்தது - ஆனால் பவுல் நம்பிக்கையின் குறிப்பு ஒன்றை உட்செருகத் தயாரானார். வசனம் 14இயில் அவர் “பிந்தின ஆதாமை” அறிமுகப்படுத்தினார்: முந்தின ஆதாம், “வரவிருந்தவருக்கு முன்னடையாளமாயிருந்தான்.” வரவிருந்தவர் கிறிஸ்துவே. ஆதாம் ஒருவன்தான் பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களில் கிறிஸ்துவுக்கு “முன்னடையாளமாக” குறிப்பிடப்பட்டவனாக இருக்கிறான்.[12]*

*இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள “type” என்ற ஆங்கில வார்த்தை, tupos என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாகும். Tupos (இது, “ஒரு வீச்சு” அல்லது “ஒரு அடி” என்பதைக் குறிக்கிறது) என்பது அடித்தல் அல்லது இடித்தலினால் ஒரு பதிவை ஏற்படுத்துதலைக் குறிக்கிறது. ஒருவேளை, நீங்கள் அரசு அலுவலர் ஒருவர் ஒரு பத்திரத்தின்மீது முத்திரை பதிப்பதைக் கண்டிருக்கலாம்.[14] அந்த முத்திரையை ஒரு “முன்னடையாளம்” என்றும் தாளின்மீது படிந்த அதன் சாயையை “எதிர்-முன்னடையாளம்” என்றும் நினைத்துக்கொள்ளுங்கள். பவுலின் ஒப்பீட்டு/நேரெதிர் ஒப்பீட்டில், ஆதாம் “முன்னடையாளமாக” இருக்கிறான். கிறிஸ்து “எதிர்-முன்னடையாளமாக” இருக்கிறார்.*

*அலுவலரின் கைப்பொறிப்பு முத்திரையையும் அது பதிப்பிக்கும் சாயையையும் ஆழ்ந்து சிந்தித்துப்பாருங்கள். சிலவழிகளில், முன்னடையாளமும் எதிர்-முன்னடையாளமும் ஒன்றுபோலிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, பின்வருவதுபோன்றதை கூறுவதற்கென்று ஒரு அலுவலர் ஒரு கைப்பொறிப்பு முத்திரையை வடிவமைப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்:*

<u>*மறுக்கப்பட்டது!*</u>

*அந்தக் கைப்பொறிப்பு முத்திரை பின்வருவது போன்ற ஒரு பதிவை விட்டுச்செல்லாது:*

<u>*அங்கீகரிக்கப்பட்டது!*</u>

*ஒரு கைப்பொறிப்பு முத்திரையும் அதன் பதிவும் ஒன்றுபோலிருப்பதைப் போன்றே, சிலவழிகளில், ஆதாமும் கிறிஸ்துவும் ஒன்றுபோலிருக்கின்றனர். இவ்விருவருமே “தலைவர்கள்” என்று நினைக்கப்படலாம்: ஆதாம், மனிதக்குலத்திற்கு உடல்ரீதியான தலைவனாக இருந்தான், கிறிஸ்து தேவனுடைய குடும்பத்திற்கு (சபைக்கு; 1 தீமோத்தேயு 3:15) ஆவிக்குரிய தலைவராக இருக்கிறார். இவ்விருவருமே முழு மனிதகுலத்தின்மீதும் செயல்தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலைச் செய்தனர்: அது தோட்டத்தில் ஆதாமுடைய பாவமும், சிலுவையில் கிறிஸ்துவின் மரணமுமே.*

*இருப்பினும், மற்ற வழிகளில், ஒரு முன்னடையாளமும் எதிர்-முன்னடையாளமும் ஒன்றுபோல இருப்பதில்லை; எதிர்-முன்னடையாளம் என்பது முன்னடையாளத்தின் திருப்புகையாக இருக்கக்கூடும். அரசு அலுவலரின் கைப்பொறிப்புச் சின்னத்திற்குத் திரும்பி, தாளின்மீது பொறிக்கப்பட்ட*

*முத்திரை பின்வருமாறு வாசிக்கப்படுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்:*

*மறுக்கப்பட்டது!*

*அது விடப்பட்ட பதிவாக இருக்குமென்றால், கைப்பொறிப்பு முத்திரையானது தனது முகப்பில் பின்வருவதையே கொண்டிருக்கும்:*

*!துடட்பப்கக்றும*

*நமது வசனப்பகுதியில் நாம் மேற்கொண்டு படிக்கையில் இந்த விவரிப்பைச் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். ஆதாமும் கிறிஸ்துவும் எப்படி ஒன்றுபோலிருந்தனர் என்பதை மட்டுமின்றி, அவர்கள் எப்படி வேறுபட்டிருந்தனர் என்பதையும் பவுல் சுட்டிக்காண்பித்தார்.*

*Tupos* என்பதன் கருத்தை எடுத்துரைக்க "pattern" (NIV) [*"வடிவமைப்பு"*], "example" [*"உதாரணம்"*], "figure" [*"உருவகம்"*] (KJV) *மற்றும்* "foreshadowing" [*"முன்நிழலிடுதல்"*] (NEB *யைக் காணவும்)* போன்ற பல்வேறு வார்த்தைகள் பயன்படுத்தப்பட முடியும். யூஜின் பீட்டர்ஸன் என்பவர், 14ம் வசனத்தின் முடிவில் பின்வரும் பொழிப்புரையை/விளக்கவுரையை எழுதினார்: *"இதற்குள் நம்மைக் கொண்டுவந்த ஆதாம் ... இதிலிருந்து நம்மை வெளியே கொண்டுவரும் ஒருவரை முன்னதாகச் சுட்டிக்காண்பித்தார்"* (MSG).

## இரண்டு "ஆதாம்களும்" நேரெதிராக ஒப்பிடப்படுதல் (5:15-17)

*ஆதாமும் கிறிஸ்துவும் எப்படி ஒன்றுபோலிருந்தனர் என்று பவுல் முதலில் கூறவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம், ஆனால் முதலில் அவர் எவ்வாறு அவர்கள் வேறுபட்டிருந்தனர் என்று விளக்கப்படுத்தினார். அடுத்த மூன்று வசனங்களைக் கண்ணோக்கிப்பார்த்து, பவுல் எப்படி "ஒப்பானதல்ல," "அதிக நிச்சயமாமே," மற்றும் "அல்லாமலும்" போன்ற நேரிதிரடையின் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் என்பதைக் காணுங்கள். இது பவுல் - ஆதாம் "இனி வரவிருந்தவருக்கு முன்னடையாளமாக இருந்தான்" என்று கூறிய உடனே - தமது வாசகர்கள், இவ்விருவரும் எல்லா அம்சங்களிலும் ஒன்றுபோல் இருக்கின்றனர் என்று நினைத்து விடுவார்கள் என்று பயந்து, விஷயம் அதுவல்ல என்று அவசரமாகச் சுட்டிக்காண்பித்தார் என்பது போன்றுள்ளது.*

### இரு செயல்களும் வேறுபட்டவையாக இருந்தன

*நேர்மாறான ஒப்பீடானது ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் செயல்களின் விளக்கங்கள்மீது கவனம் குவிக்கிறது: ஆதாமின் பாவம் மற்றும் கிறிஸ்துவின் பலி. முதலாவது சுயபோகத்தின் செயலாக இருந்தது, இரண்டாவது சுயத்தை மறத்தலின் செயலாக இருந்தது.*

*பவுல், "ஆனாலும் மீறுதலின்[15] பலன் கிருபைவரத்தின் பலனுக்கு*

ஒப்பானதல்ல" என்று தொடங்கினார் (வசனம் 15அ). "கிருபை வரம்" என்பது *charisma* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "கொடை" என்பதற்கான வார்த்தையாகவும் "கிருபை" (*charis*) என்ற வார்த்தையுடன் தொடர்புடையதாகவும் உள்ளது. "கிருபைவரம்" என்பது தேவைக்கு மிகுதி யாகக் கூறப்படுவதாக உள்ளது, ஏனெனில் ஒரு வரம் என்பது அதைப்பெறுவர் ஈட்டியிராதது என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய வரம் (இது சிலுவையில் மையங்கொண்டுள்ளது) ஆதாமின் "மீறுதலுக்கு" *ஒப்பானதல்ல* என்பது பவுலின் வலியுறுத்தமாக இருந்தது. NEB வேதாகமத்தில், "God's act of grace is out of all proportion to Adam's wrongdoing" ["தேவனுடைய கிருபையின் செயலானது ஆதாமின் தவறான செய்கையின் எல்லாவிகிதத்திற்கும் மேலானதாக உள்ளது"] என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்ததாகப், பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது பற்றிய உதாரணம் ஒன்றைக் கொடுத்தார். ஒருபுறத்தில், "ஒருவனுடைய [ஆதாமினுடைய] மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க" (வசனம் 15ஆ). "அநேகர்" என்பதற்கான (*polus* என்ற) கிரேக்க வார்த்தை "பெரிய எண்ணிக்கையிலான" என்று அர்த்தப்படுகிறது. எவ்வளவு பெரியது என்பது சந்தர்ப்பப்பொருளைச் சார்ந்ததாக உள்ளது. இவ்வசனப்பகுதியில், "அநேகர்" என்பது "எல்லாரும்" என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (வசனம் 18ஐக் காணவும்). *எல்லாரும்* உடல்ரீதியாக மரித்தல் என்பது ஆதாமின் பாவத்தினுடைய ஒரு விளைவாக உள்ளது. "இயற்கை நிகழ்வாக மரித்தல் என்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதாயிற்று" (Phillips). பாவம் என்பது அதன் துன்பவிளைவுகள் எல்லாவற்றுடனும் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பது இன்னொரு விளைவாக இருந்தது.

இன்னொருபுறத்தில், "தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிக மாய்ப் பெருகியது" (வசனம் 15இ). இயேசுவினால் வரும் தேவனுடைய "கிருபை"யானது ஆதாமினுடைய பாவத்தின் செயல்விளைவைத் திருப்பிப் போட்டது. எல்லா மக்களும் ("அனைவரும்") மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:28, 29). இருப்பினும், தேவனுடைய "கிருபை" அதைக்காட்டிலும் "மிகவும் அதிகமானவற்றை" செய்கிறது. எல்லா மக்களும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவது மாத்திரமின்றி, அவர்களுக்கு ஆவிக்குரிய உடல்களும் தரப்படும் (1 கொரிந்தியர் 15:44ஐக் காணவும்). மற்றும், நீதிமான்கள் "நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்" (மத்தேயு 19:29). மேலும், இரட்சிக்கப்பட்டவர்கள், ஆதாமினால் இழக்கப்பட்டதைக் காட்டிலும் மேன்மையானதொரு பரதீசில் குடியிருப்பார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21; 22ஐக் காணவும்). J. W. மெக்கார்வீ என்பவர், "உலகத்தின் நம்பிக்கையானது … 'அதிகமாய்ப் பெருகியிருக்கிறது' என்பதன்மீது அமைந்து கிடக்கிறது" என்று எழுதினார்.[16]

இவையாவும் கிருபையின் வரமாக இருந்தது; ஆதாம் செய்திருந்தவற்றை நீக்கிப்போடுவதற்குக் கர்த்தர் கடன்பட்டிருந்ததில்லை. இவ்வாறு பவுல், "தேவனுடைய *கிருபையும்* இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய *கிருபையினாலே வரும் ஈவும்*" என்பது பற்றிப் பேசினார். "கிருபை" (இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது) என்பதற்கான வார்த்தை *charis* என்பதிலிருந்து

*வருகிறது. "வரம்" என்பது முந்திய வசனத்தில்போல் charisma என்பதிலிருந்து வருவதில்லை, ஆனால் "இலவசமான கொடை" என்றும் அர்த்தப்படுகிற dorea என்ற வார்த்தையிலிருந்து வருகிறது.*[17] *நாம் கருத்தைத் தவறவிட்டுவிடாதபடிக்குப் பவுல் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: தேவன் நமக்குச் செய்கிறது ஒரு ஈவாக உள்ளது, இது அவரது கிருபையின் வெளிப்பாடாக உள்ளது.*

**இலக்கில் செயல்கள் மாறுபடுகின்றன**

*16ம் வசனத்தில் பவுல், ஆதாமின் ஒரு செயலையும் கிறிஸ்துவின் ஒரு செயலையும் நேரெதிர்ப்படுத்துவதை மேலும் முன்னேற்றினார்: "மேலும் ஒருவன்* [*ஆதாம்*] *பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு* [*dorea*] [of Jesus] *ஒப்பானதல்ல" (வசனம் 16அ). அப்போஸ்தலர் இங்கு, தேவனுடைய ஈவானது ஆதாமின் பாவத்திற்கு எதிர்ச்செயல் செய்வதைக் காட்டிலும் "அதிக மானவற்றைச் செய்கிறது" என்று மீண்டும் சுட்டிக்காண்பித்தார்.*

*"அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம்* [*ஆதாமின் பாவத்தினிமித்தம்*] *ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது" என்று பவுல் கூறினார் (வசனம் 16ஆ). பவுல், ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அடிக்கடி செய்தது போல, இவ்விடத்தில் நீதிமன்ற அறையின் மொழிநடையைப் பயன்படுத்தினார். "தீர்ப்பு"* ("judgment") *என்பது krima என்பதிலிருந்து வருகிறது, இது "தீர்ப்பு"* ("the verdict") *என்பதைக் குறிக்கிறது* (McCord) *"ஆக்கினை" என்பது katakrima (இது krima என்பதன் வலுவூட்டப்பட்ட சொல்வடிவமாகும்) என்பதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இது தீர்ப்பின் விளைவாக கூறப்பட்ட "தண்டனையை"*[18] *குறிக்கிறது. Katakrima என்பது மனிதகுலத்தின்மீது வந்த எல்லாப்பொல்லாங்கையும் அடையாளப்படுத்துகிறது, இது உடல்ரீதியான மரணத்தின்மீது விசேஷித்த வலியுறுத்தம் கொண்டுள்ளது.*[19] *இதைப் பற்றிச் சிந்தித்துப்பாருங்கள்: ஒரு <u>தனி</u> பாவம் என்பது வாழ்ந்திருக்கும் <u>எல்லாருக்கும்</u> - ஆண்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகள் எல்லாருக்கும் - உடல்ரீதியான மரணத்தை விளைவித்தது!*[20]

*"கிருபைவரமோ* [*charisma*] *அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது" என்று பவுல் தொடர்ந்து கூறினார் (வசனம் 16இ). "அநேக குற்றங்கள்" என்ற சொற்றொடரின் மறைமுகமான கருத்துக்களை ஒருகணம் ஆழ்ந்து சிந்துத்துப் பாருங்கள். ஒரு மீறுதல் என்பது மனிதகுலம் முழுமையையும் பாதிக்கும் அளவுக்கு அவ்வளவு பயங்கரமாயிருந்தது என்றால், "அநேக குற்றங்கள்" என்பவற்றின் முற்றிலும் கொடூரமான பேரழிவைக் கணக்கிட முயற்சிசெய்துபாருங்கள்: முதல் பாவத்திலிருந்து செய்யப்பட்டுள்ள கோடானகோடிக்கணக்கான பாவங்கள். மோசஸ்* E. *லார்டு என்பவர் பின்வருமாறு எழுதினார்,*

> *... மரணம் என்பது ... <u>ஒரு தனிப்பட்ட பாவத்திற்குப்</u> போதுமானதற்கும் அதிகமாக உள்ள தண்டனை என்று யூகித்தால் ... பாவத்தின் இயல்பு ... புரிந்துகொள்ளப்பட இயலாததாகிறது. ... எந்த மனிதப் பிறவியும் அதன் ஏராளத்தன்மையை எண்ணிப்பார்க்க இயலாது. இந்த வீதத்தில் சென்றால், ஒரு ஐம்பது ஆண்டுகள் காலம் வாழும் ஒரு தனிமனித வாழ்வில் அவர் செய்யும் பாவங்களுக்குப் போதுமான தண்டனை என்னவாக இருக்கும்?*[21]

*அந்த "தனிநபர் வாழ்வை" கடந்தகாலத்தில் வாழ்ந்திருந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் இன்றைய நாட்களில் வாழ்ந்து கொண்டுள்ள அறுநூறுகோடிப்பேர் என்ற எண்ணிக்கையினால் பெருக்கிக்கொள்ளுங்கள் - இதன் பெருக்குத்தொகை மனிதனின் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இவ்வாறு இந்தக் கேள்வி கேட்கப்பட்டாக வேண்டும்: தேவனின் ஈவானது, ஆதாமின் பாவத்தினுடைய பாதிப்பை மாத்திரமல்ல, ஆனால் "பல மீறுதல்களின்" பாதிப்பையும் நீக்கிப்போடப்போதுமானதாக உள்ளதா?*

பவுலின் பதில் மறுபடியும் ஒலிக்கும் ஆம் என்ற உறுதிக்கூற்றாக இருந்தது. இலவசமான கொடையானது "நீதிவிளங்குதல்" என்பதை விளைவித்தது என்று அவர் கூறினார் (வசனம் 16ஈ). மீண்டுமாக, அவர் சட்ட மொழியைப் பயன்படுத்தினார். NEB வேதாகமத்தில் "the act of grace ... issued in a verdict of acquittal" என்றுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஆதாமுக்கும் அவனது சந்ததியார் யாவருக்கும் கூறப்பட்ட தீர்ப்பானது இயேசுவின் மூலம் மாற்றப்பட்டது. உடல்ரீதியான மரணத்தைப் பொறுத்தமட்டில் இது உண்மை யானதாக உள்ளது. நாம் இன்னமும் மரிக்கிறோம் (எபிரெயர் 9:27); ஆனால், இயேசுவினிமித்தம் மரணம் என்பது ஒரு நிரந்தரமானநிலையாக இருப்பதில்லை (யோவான் 5:28, 29).

ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தமட்டிலும் இது உண்மையாக உள்ளது. தேவனுடைய கிருபையின் "அதிகமாய்ப் பெருகும்" தன்மையே இவ்வசனப் பகுதியில் பவுலின் வலியுறுத்தமாக உள்ளது என்பதைச் சிந்தையில் வையுங்கள். ரோமருக்கு எழுதிய நிருபத்தில் "நீதிமானாக்கப்படுதல்" என்பது (*dikaioma*) பொதுவாக தேவனுடைய பார்வையில் சரியானவர்களாக எண்ணப்படுதலையே குறிக்கிறது. இவ்வசனப்பகுதியில், *dikaioma* என்பது [தேவனுடைய] ஈவின் ஆவிக்குரிய பலன்களையே உள்ளடக்கியிருக்கிறது என்பது நிச்சயம்.[22] மெக்கார்வி பின்வருமாறு எழுதினார்,

> *கிறிஸ்துவின் பலியானது எண்ணற்ற பாவிகளால், மனித வாழ்வின் மொத்த கணங்களிலும், செய்யப்பட்ட கணக்கற்ற பாவங்களின் [இந்தப் பாவம் ஒவ்வொன்றும் காலத்தின் எந்தப் பகுதியினாலும் தீர்த்துவைக்க இயலாத அழிவுசக்தியைக் கொண்டுள்ளது] ஒன்றுகுவிந்த வல்லமையை விசுவாசிகளுக்கு நீக்கிப்போட்டுள்ளபடியால், கிறிஸ்துவின் பலியினுடைய நீதிமானாக்கும் வல்லமையை யாரால் மதிப்பிடமுடியும்?*[23]


### செயல்விளைவில் செயல்கள் மாறுபடுகின்றன

பவுல் மீண்டும் 17ம் வசனத்தில் தேவனுடைய ஈவின் ஆவிக்குரிய செயல் விளைவை வலியுறுத்தினார். அவர், "ஒருவனுடைய மீறுதலினாலே,[24] அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க" [வசனம் 14ஐக் காணவும்] என்று கூறினார் (வசனம் 17அ). NEB வேதாகமத்தில், "death established its reign, through a single sinner" என்றுள்ளது. பின்பு பவுல் தனது நேர்மாறான ஒப்பீட்டை ஏற்படுத்தினார்: "கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" (வசனம் 17ஆ).

17ம் வசனத்தில் குறைந்தபட்சம் மூன்று நேரெதிர் ஒப்பீட்டின் கருத்துக்கள்

விளக்கியுரைக்கப்பட்டுள்ளன அல்லது மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது, கிருபையின் பலன் மீறுதலின் பலனைவிட "அதிகமாய்ப் பெருகியிருக்கிறது." இந்த "அதிகமாய்ப் பெருகியிருக்கிறது" என்ற வார்த்தைகளின்மூலம் வலியுறுத்தம் திரும்பவும் வலுப்படுத்தப்பட்டுள்ளது ("the rich supply"; NIrV). இந்த "அதிகமாய் பெருகியிருக்கிறது" என்பதன் பலனானது "நீதியாகிய [*dikaiosune*] ஈவின் [*dorea* என்பதிலிருந்து வருகிறது]" என்ற வார்த்தைகளில் விளக்கியுரைக்கப்பட்டுள்ளது. "நீதி" என்பது "நீதிமானாக்கப்படுதல்" போன்ற வார்த்தைகளின் குடும்பத்தில் இருந்து வந்த அதே வார்த்தையாக உள்ளது. இது தேவனுடைய பார்வையில் சரியானவர்களாக எண்ணப்படுதலைக் குறிக்கிறது.

இரண்டாவது நேர்மாறு ஒப்பீடு மறைமுகமானதாக உள்ளது. ஆதாமின் மீறுதலினால் ஏற்பட்ட ஒரு விளைவைப் பொறுத்தமட்டில் நாம் தேர்ந்துகொள்வதற்கென்று ஒன்றுமில்லை: நாம் பிறந்தால், நாம் உடல்ரீதியாக மரிப்போம். (கிறிஸ்துவின் வருகையின்போது உயிருடன் இருப்பவர்கள் மாத்திரமே மரணத்திற்குத் தப்பிப்பார்கள் [1 தெசலோனிக்கேயர் 4:15-17ஐக் காணவும்].) இருப்பினும், நாம் தேவனுடைய ஈவின் மிக முக்கியமான விளைவைப் பொறுத்தமட்டில் தேர்வுசெய்தலைக் கொண்டுள்ளோம்: அது நீதிமானாக எண்ணப்படுதல். இவ்வாறு பவுல், "கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள்" பற்றிப் பேசினார். எந்த ஒரு கொடையும் ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். தேவனுடைய கொடையை ("விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்" மூலம் [ரோமர் 1:5; 16:26]) ஏற்றுக்கொள்கிறவர்கள் ("பெற்றுக்கொள்கிறவர்கள்") மாத்திரமே அந்தக் கொடையின் முழு பலன்களையும் பெறுகின்றனர்.




நேர்மாறான ஒப்பீட்டின் மூன்றாவது கருத்து எதிர்பாராத தாக உள்ளது. 17ம் வசனத்தின் முதல் பாகத்தில் பவுல், *மரணம்* ஆண்டு கொண்டிருத்தல் பற்றிப் பேசினார். நாம் முன்னோக்கிச் செல்கையில், கிறிஸ்துவின் மூலமாக இப்போது *ஜீவன்* ஆண்டுகொண்டிருக்கிறது என்று வாசிக்க எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாக, பவுல் அந்த ஈவைப் பெறுகிறவர்கள் "ஜீவனை அடைந்து ஆளுவார்கள்" என்று கூறினார். அடிமைகள் (பாவிகள்) ஆண்டுகொள்ளுபவரின் இடத்தில் (மரணத்திற்குப் பதிலாக) வைக்கப்படுகின்றனர்!

கிறிஸ்தவர்கள் இப்போது கிறிஸ்துவின் ராஜ்யத்தின் (சபையின்) ஒரு பகுதியினராக "ஆளுகின்றனர்." (வெளிப்படுத்தின விசேஷம் 1:6; 5:10ஐக் காணவும்) மற்றும் அவர்கள் நித்தியத்திற்கும் கிறிஸ்துவுடனேகூட ஆளுகை செய்வார்கள் (2 தீமோத்தேயு 2:12ஐக் காணவும்). "ஜீவனை அடைந்து ஆளுதல்" என்பதுபற்றி, நமக்கு இயேசுவின் பின்வரும் கூற்று நினைவுபடுத்தப்படுகிறது:

“நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்” (யோவான் 10:10). நாம் இப்போது கிறிஸ்துவுக்குள் “புதிய ஜீவன்” பெற்றவர்களாக இருக்கிறோம் (ரோமர் 6:4), மற்றும் ஒருநாளில் நாம் பரலோகத்தில் “நித்திய ஜீவனை” மகிழ்வுடன் அனுபவிப்போம் (ரோமர் 6:23; தீத்து 1:2ஐக் காணவும்).

மீண்டுமாக, ஒரு மனுஷன் (ஆதாம்) துக்கத்தைக் கொண்டுவந்தான், ஒரு மனுஷர் (கிறிஸ்து) மகிழ்ச்சியைக் கொண்டுவந்தார் என்று வலி யுறுத்தப்பட்டுள்ளது: “அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க,கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே” (ரோமர் 5:17).

## முடிவுரை

நமது அடுத்த பாடத்தில், நாம் இரண்டு “ஆதாம்களும்” *ஒப்பிடப்படுதலைக்* கண்ணோக்கி, ரோமர் 5:12-21ன் மீதான நமது படிப்பை முடிப்போம் (வசனங்கள் 18-21). பின்பு நாம் இந்தக் கடினமான வசனப்பகுதியிலிருந்து நடைமுறைப் பயன்பாடுகளைத் தரவழைப்பதன்மூலம் இந்தப் படிப்பை முடிப்போம்.

நாம் இப்பாடத்தை முடிக்கையில், மீண்டுமாக இரண்டு “ஆதாம்களையும்” கண்ணோக்குங்கள். முந்தின ஆதாம் (ஆதியாகமம் 5:1-5). ஒரு சாபத்தைக் கொண்டுவந்தான் (ஆதியாகமம் 3:17; மல்கியா 4:6 ஆகிய வசனங்களைக் காணவும்), “பிந்தின ஆதாமின்” வரலாறு (மத்தேயு 1:1; 1 கொரிந்தியர் 15:45ஐக் காணவும்) “இனி சாபமிராது” என்று முடிகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 22:3). முந்தின ஆதாம் உலகத்திற்குள் மரணத்தைக் கொண்டு வந்தான், “பிந்தின ஆதாம்” ஜீவனைக் கொண்டு வந்தார். நீங்கள் முந்தின ஆதாமைப் பின்பற்றி மரிக்கக் கூடும் - அல்லது “பிந்தின ஆதாமை” பின்பற்றி ஜீவன் பெறக்கூடும்.

“மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதே” என்று இந்த வசனப்பகுதியின் ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்கக்கூடும். உங்கள் உடல்ரீதி யான மரணத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடியது எதுவுமில்லை, ‘‘அன்றியும் ஒரேதரம் மரிப்பதும் … மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற[து]” (எபிரெயர் 9:27); ஆனால் ஆவிக்குரிய மரணத்தைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடிய விஷயம் உள்ளது. நீங்கள், உங்கள் “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாக” இருக்கக்கூடும் (எபேசியர் 2:1), அல்லது நீங்கள் ‘‘கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட” முடியும் (வசனம் 5). அவ்வாறே, உடல்ரீதியான வாழ்வைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடியது என்று எதுவுமில்லை; பிறப்பதை நீங்கள் தேர்ந்துகொள்ள இயலாது. இருப்பினும், ஆவிக்குரிய வாழ்வைப் பொறுத்தமட்டில் நீங்கள் தேர்ந்துகொள்ளக்கூடிய விஷயம் உள்ளது. உங்களுக்கு “ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவுமே” இயேசு வந்தார் (யோவான் 10:10) - ஆனால் அவருடைய கிருபையின் அளிப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ முடியும். மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதாக உள்ளது.

## *பிரசங்கியார்களுக்கும் போதகர்களுக்கும் குறிப்புகள்*

*இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்துவதில், நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, ''விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்'' மூலம் ஜீவனைத் தேர்ந்துகொள்வது எப்படி என்று கூற விரும்பலாம் (1:5; 16:26; 1:16; 10:9, 10; 6:3-6; 12:1) ஆகிய வசனங்களைக் காணவும்). "மரணமா அல்லது ஜீவனா? தேர்ந்துகொள்ளுதல் உங்களுடையதே" என்பது இந்தப் பாடத்திற்கான மாற்றுத் தலைப்பாக இருக்கிறது.*

---

*குறிப்புகள்*

[1]*இந்தப்பாடத்திற்கான முதன்மைத் தலைப்புகள் பின்வரும் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டன:* John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 149, 154, 156. [2]Chrysostom *Homilies on the Epistle to the Romans* Homily 10. [3]*இன்றைய நாட்களில் உள்ள தேவநம்பிக்கையற்ற "கல்வியாளர்கள்" சிலரைப் போலின்றி பவுல், ஆதாமின் வரலாற்றையும் ஆதியாகமத்தில் உள்ள வீழ்ச்சி பற்றிய வரலாற்றையும் வரலாற்றுப்பூர்வ மாக மிகச்சரியானவைகள் என்று நம்பினார்.* [4]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 149. [5]Adapted from David F. Burgess, comp., *Encylopedia of Sermon Illustrations* (St. Louis: Concordia Publishing House, 1988), 57-58. [6]*நமது வசனப்பகுதி யில் "மரணம்" என்ற வார்த்தை உடல்ரீதியான மரணத்தை மாத்திரம் குறிக்கிறது என்று நம்புபவர்கள், ஒரே பாவம் (ஆதாமின் பாவம்) உலகத்தின்மீது கொண்டிருந்த செயல்விளைவு மீது பவுலின் வலியுறுத்தம் இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கின்றனர். அவர்கள், "எல்லாரும் பாவம் செய்து" என்ற வார்த்தைகள் சந்தர்ப்பப்பொருளில் பொருந்தி வருவதற்கு, ஆதாம் பாவம் செய்தபோது அது அவனது சந்ததிகள் எல்லாரும் பாவம்* செய்தது போலாயிற்று *என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏவுதல்பெற்ற எழுத்தாளர்கள் சிலவேளைகளில் இவ்வகையான வாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். எபிரெயர் 7:9, 10ஐக் காணவும், அங்கு மெல்கிசேதேக்குக்கு லேவி தான் பிறப்பதற்கு நீண்டகாலம் முன்பே தசமபாகம் செலுத்தினான் - ஏனென்றால் லேவியின் தாத்தாவுக்குத் தாத்தாவான ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் செலுத்தியிருந்தார் என்று அந்த எழுத்தாளர் கூறினார்.* [7]*ரோமர் 3:23ல் போலவே,* பொறுப்புள்ள *தனிநபர்களைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது புரிந்துகொள்ளப்படுகிறது.* [8]*"மரணம்" என்பது நமது வசனப்பகுதி முழுவதிலும் உடல்ரீதியான மரணத்தையே குறிப்பதாக எடுத்துக்கொள்வதென்றால், 13ம் வசனத்தில் பவுலின் வார்த்தைகள் பின்வரு மாறு இருந்திருக்கலாம்: உடல்ரீதியான மரணம் என்பது* தனிப்பட்ட *பாவத்திற்கான தண்டனையாக இருந்தால், மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் எவரொருவரும் மரித்திருக்க மாட்டார்கள்.* [9]*"ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்கள்" என்பது குழந்தைகளைப் பற்றிய குறிப்பாக இருக்கக்கூடும்.* [10]*''மீறுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (parabasis என்ற) கிரேக்க வார்த்தை அடிக்கடி ஆங்கில மொழியில்* ''transgression'' *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் "துன்பத்தில் இருந்து வெற்றிக்கு" என்ற பாடத்தில் இந்தக் கிரேக்க வார்த்தை கலந்துரையாடப்பட்டது.*

[11]*கொலைசெய்பவர்கள் கொல்லப்படவேண்டும் என்று தேவன் கட்டளை யிட்டிருந்தார் (ஆதியாகமம் 9:6), "ஆனால் மரணதண்டனைக்கு உட்படும் எல்லா*

*வற்றிற்கும் பொதுவான சட்டம் எதுவும் இருந்ததில்லை"* (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati: Standard Publishing, n.d.], 335). [12]F. F. Bruce, *The Letter of Paul to the Romans*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 124. [13]Vine, 202; *The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, 1971), 411. [14]*உங்கள் வாசகர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு விவரிப்பைப் பயன்படுத்துங்கள்.* [15]*சிலவேளைகளில் "மீறுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒரு வார்த்தையைப்பற்றி "துன்பத்திலிருந்து வெற்றிக்கு" என்ற பாடத்தில் இந்தப் புத்தகத்தின் முன்பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது அதே அடிப்படை அர்த்தம் கொண்ட வேறு வார்த்தையாக (paraptoma) உள்ளது. இதன் வினைச்சொல் வடிவமானது (parapipto) "புறம்பே [para] விழுதல் [pipto]" என்று அர்த்தப்படுகிறது.* [16]McGarvey and Pendleton, 336. [17]Vine, 264. [18]Ibid., 119. [19]*"உடல்ரீதியான மரணம்மட்டுமே" என்ற கண்ணோக்கில், "ஆக்கினைத்தீர்ப்பு" என்பது உடல்ரீதியாக மரிக்க ஆக்கினைத்தீர்ப்புப் பெற்றிருத்தலைமட்டுமே முற்றிலும் குறிக்கிறது.* [20]*முன்னரே குறிப்பிட்டபடி, ஏனோக்கு ஒரு விதிவிலக்காக இருந்தார். எலியா இன்னொரு விதிவிலக்காக இருந்தார். மேலும் கிறிஸ்துவின் மறுவருகையின்போது உயிருடன் இருப்பவர்கள் உடல்ரீதியாக மரிக்கமாட்டார்கள்.*

[21]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 167. [22]*"உடல்ரீதியான மரணம் மாத்திரமே" என்ற கருத்தைப் பரிந்துரைப்பவர்களில் சிலர், "நீதிமானாக்கப்படுதல்" என்பது இவ்விடத்தில் உடல்ரீதியான மரணத்திற்கான தண்டனை மாற்றப்படுதலை மாத்திரம் குறிக்கிறது என்று வலியுறுத்துகின்றனர்.* [23]McGarvey and Pendleton, 338. [24]*கிரேக்க வார்த்தை "ஒரு மீறுதலினாலே" என்று மொழிபெயர்க்கப்பட முடியும்.*